DHL WORLDWIDE EXPRESS
C/o COSMOS
MARKETING SERVICES.
120, K. K. S. Road Jaffna.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

துரித தபால் சேவைக்கு
இன்றே நாடுங்கள்!
DHL International
பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளி நாட்டு தபால்களையும் எம்மிடம் ஒப்படைக்கவும்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 21 வெள்ளிக்கிழமை (06-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 276

மொஸாட் அமைப்பு பின்னணி பிரேமாவுக்கு எதிரான சதியில்!

ஐ. தே. க. செயற்குழு மீது லலித் வழக்குத் தாக்கல்!

[கொழும்பு, செப். 6

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தமக்கு எதிராக எடுக்கப்படக் கூடிய ஒழுங்கு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காக திரு. லலித் அத்துலத் முதலி நீதிமன்றம் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது விடயத்தில் ஐ.தே.க. செயற்குழுவுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு ஒன்றை விதிக்குமாறு கோரி, திரு. லலித் அத்துலத்முதலி இன்று நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்வார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த தலைமைக்கு எதிராகச் செயற்பட்டதற்காக திரு. லலித் அத்துலத் முதலி மீதும், ஐ. தே. கவின் அதிருப்தியாளர் குழு எம். பிக்கள் ஏனையோர் மீதும் கட்சிச் செயற்குழு ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நிட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியானதை அடுத்தே அதை தடுத்து நிறுத்த திரு. லலித் நீதிமன்ற உதவியை நாடியிருப்பதாக அவருடன் தொடர்புபட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

சர்வசன வாக்கெடுப்பு நடத்தத் தேவையில்லை!

ரணில் இப்போது அறிவிப்பு

கொழும்பு, செப். 6

அரசுக்கு மக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளான எம். பிக்களுக்கும் மிகுந்த நம்பிக்கை இருக்கிறது. ஆகவே சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை தொடர வேண்டுமா அல்லது பழைய நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறை [வெஸ்மினிஸ்டர் நாடாளுமன்ற ஆட்சி முறை] மீண்டும் நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டுமென எம். பிக்கள் விரும்பினால் நான் அதை எதிர்க்கவில்லை"

—இப்படி ஜனாதிபதி பிரேம

(3ஆம் பக்கம் பார்க்க)

முன்னர் 'வாய் திறக்கவில்லை...'!

செய்தியாளர் மாநாட்டில் லலித் மீது ரணில் 'பாய்ச்சல்'

கொழும்பு, செப். 6

மதற்றைய அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்க, திரு. லலித் அத்துலத் முதலி மீது குற்றம் சுமத்திப் பேசினார்.

"திரு. லலித் அத்துலத் முதலி இதுவரை நடந்த எந்த ஓர் அமைச்சரவைக் கூட்டத்திலோ, அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலோ அல்லது ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்திலோ முன்னர் போல் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற வகையில் ஏதும் 'வாய் திறக்கவில்லை'.

(3ஆம் பக்கம் பார்க்க)

அதிருப்தியாளரைச் சமாளிக்க அரசு எடுத்த முயற்சி தோல்வி!

கொழும்பு, செப். 6

ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவினருடன் சமரசம் ஏற்படுத்திக்கொள்ள அரசு எடுத்த முயற்சி தோல்வி அடைந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

அரசின் சார்பாக அமைச்சர்களான ரணில் விக்கிரமசிங்க, சிறிசேன கூரே ஆகியோரும் அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த திரு. காமினி திசாநாயக்காவையும் லலித் அத்துலத் முதலியையும் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது இரு தரப்பினரும் தத்தமது சார்பில் பல விடயங்களையும் எடுத்துச் சொல்லி விவாதித்தனர் என்றும்—

விட்டுக் கொடுக்கார்த்த வகையில் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தால், இறுதியில் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன என்றும் தெரியவருகிறது.

எனினும் திரு. லலித் அத்துலத் முதலி சந்திப்பு சுமுகமாக நடந்தது என்றும், அடுத்த கட்ட சந்திப்பு தொடரும் என்றும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆனால் அமைச்சர் திரு. சிறிசேன குரே "ஜனாதிபதியின் நற்பெயரைக் கெடுக்க திரு. லலித் முயற்சிக்கிறார்" என்று குற்றம் சுமத்தியிருக்கிறார்.

(மேலும் ஒரு செய்தி 9ஆம் பக்கம்)

கிளர்ச்சி எம். பிக்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை!

அமைச்சர் கூரே எச்சரிக்கை

ஆனும் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள கிளர்ச்சிக்கார எம். பிக்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ. தே. க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே எச்சரித்திருக்கிறார்.

இதனால் கட்சியில் பிளவு ஏற்படலாம் என்றும் பிளவைத் தடுப்பதில் கட்சி முக்கியஸ்தர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் செய்தியாளர்கள் அறிவித்தனர்.

திரு. காமினி திசாநாயக்கா, திரு. லலித் அத்துலத் முதலி ஆகியோருடன் நடந்த சந்திப்பின் பின்னரே திரு. கூரே, ஜனாதிபதிக்கு விரோதமாகப் போர்க் கொடி தூக்கியுள்ள ஐ. தே. க. எம். பிக்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார். [ஒ-எ]

தொண்டமான் இந்தியா பயணம்

கொழும்பு, செப். 6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் நேற்று இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். [ஒ-எ]

நிலாவெளியில் சிப்பாய் பலி

மட்டக்களப்பு, நிலாவெளிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய 'கிளைமோர்' தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று கொழும்பிம் தெரிவிக்கப்பட்டது. [ஒ-த]

புங்குடுதீவில் பீரங்கி தாக்கு

யாழ்ப்பாணம், செப். 6

புங்குடுதீவு கடற் பகுதியில் நிலைகொண்டுள்ள பீரங்கிப் படகுகளில் இருந்து நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் புங்குடுதீவுப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [ஒ-5]

ஷெல் தாக்கு

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று சுற்றுப்புறக் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சேத விவரங்கள் தெரிய வரவில்லை. [ஒ-15]

அதிருப்தியாளருக்கு நிதி உதவி வழங்கி அவர்களைத் தூண்டி விடுகிறதாம்!

கொழும்பு, செப். 6

தம்மைப் பதவியில் இருந்து அகற்றும் சதியின் பின்னணியில் இஸ்ரவேலிய உளவு அமைப்பான மொஸாட் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா குற்றம் சுமத்தியிருக்கிறார்.

இதற்காக மொஸாட் உளவு அமைப்பு ஆளும் கட்சியில் உள்ள — தமக்கு எதிரான — நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி உதவி வழங்கி, அவர்களைத் தூண்டி வருவதாகவும் அவர் சொன்னார்,

செய்தி ஏஜென்ஸிகள் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டன.

கொழும்பில் இயங்கிய இஸ்ரவேலிய நலன் காக்கும் பிரிவை முடிவிடும்படி தாம் உத்தரவிட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமக்கு எதிராக மொஸாட் தூண்டிவிடுகின்றது என்றும் திரு. பிரேமதாஸா கூறியிருக்கிறார்.

இவ்வாறு குற்றம் சுமத்தியிருப்பதன் மூலம்—

தமக்கு எதிராகச் செயற்படும் முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்கா ஆகியோரை மொஸாட்டின் ஏஜென்ட்கள் என்று திரு. பிரேமதாஸா மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்று செய்தி ஏஜென்ஸிகள் மேலும் தெரிவித்தன. [உ-எ]

நல்லூரில் நாளை தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், செப். 6

நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா நாளை [சனிக்கிழமை] பக்திபூர்வமாக நடைபெற உள்ளது.

நாளை காலை 8 மணிக்கு முருகப்பெருமான், வள்ளி, தெய்வானை சமேதராய் அலங்கரிக்கப்பட்ட தேரில் ஆரோகணித்து பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்;

பல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேர்த்திருவிழாவன்று முருகப் பெருமானின் அருளைப் பெற ஆலயத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் வெகுசிறப்பாக நடைபெறும். [ஒ-126-5]

மணலாறில் 24 மணிநேரமும் இடைவிடாது குண்டு வீச்சு!

எரிகுண்டு வீச்சினால் காடுகள் தீப்பற்றி எரிகின்றன!!

கொழும்பு, செப். 6

கடும் சண்டை நடைபெற்றுவரும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் மணலாறுப் பகுதிகளிலும் ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் 24 மணி நேரமும் இடைவிடாது குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்திவருகின்றன.

ஸ்ரீலங்காப் படைகளின் தரப்பில் தகவல் வெளியிட்ட இராணுவ அதிகாரி கேர்ணல் சரத் முனசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்கள் மத்தியில் அவர் பேசினார். கடந்த ஒரு வாரகாலமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடும் இராணுவ நடவடிக்கைகளில் அரசுப் படைகள் ஈடுபட்டு வருவதாகக் கூறிய அவர், சண்டைகுறித்து மேலதிக விவரங்களை வெளியிட மறுத்து விட்டார்.

அதேநேரம் விமானப் படைத் தளத்தில் இருந்து அடுத்தடுத்துக் கிளம்பிச்செல்லும் போர் விமானங்கள், யுத்தப் பகுதியிலும், காடுகளின் மீதும் குண்டுவீசித்தாக்கி வருவதை தாம் நேரில் கண்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

25 படையினர் வரை பலி!

மணலாறு - நித்தியக்குளம் பகுதியில் நேற்று ஐந்தாவது நாளாக உக்கிரச் சண்டை நடைபெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காட்டுப் பகுதிக்குள் முன்னேற முயற்சிக்கும் இராணுவத்தினரை பல இடங்களிலும் வழி மறித்துப் புலிகள் தாக்கி வருவதாகவும் அறியவந்தது.

இதுவரை மணலாறு மற்றும் பகுதிகளில் இடம்பெற்ற சண்டைகளில் 25 இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்திருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

(மேலும் ஒரு செய்தி 9ஆம் பக்கம்)

வவுனியாவில் புதனன்று இரு தமிழர் சுட்டுக்கொலை!

கடந்த சில நாட்களாக வவுனியாப் பகுதியில் பொது மக்கள் இராணுவத்தினரால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா-பூமாங்குளத்தில் நேற்று முன்தினம் [புதன்] மூன்று தமிழர்களைக் கைது செய்த படையினர் சித்திரவதை செய்தபின் அவர்களில் இருவரை கட்டுக்கொன்றனர். மூன்றாமவர் காயம் அடைந்த நிலையில் அங்கிருந்து தப்பி ஓடிவந்துள்ளார்.

ரெங்காசாமி இராமலிங்கம் (சுடமாங்குளம்), பொன்னையா குமுதை வேது (பூமாங்குளம்) ஆகிய இருவருமே கொலையுண்டவர்கள் ஆவர். [ஒ-5]

யாழ். பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக மீண்டும் துரைராஜா நியமனம்

கொழும்பு, செப். 6

யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக மீண்டும் பேராசிரியர் துரைராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சிபாரிசுக்கு இணங்க இம் மாதம் 12 ஆம் திகதி முதல் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக அவரை ஜனாதிபதி நியமித்திருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

பேராசிரியர் துரைராஜா யாழ். பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக இரண்டு பதவிக்காலங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

நாற்றுஇட மாங் கொட்டை, மற்றும் லக்ஸ் பிறே, ஹைலன்ட் போன்ற பால்மா வெற்றுப்பைக் கற்றுகள் தேவை. மில்க் வைற். யாழ்ப்பாணம். [சி/0470]

மணமகன் தேவை

26 வயது, 27 வயதுடைய ஆசிரியைகள் இருவருக்கு ஆசிரியர், அரச ஊழியர், கல்வி கற்று தனித்தொழில் புரிகின்ற 28-36 வயதுக்குட்பட்ட இந்து மணமக்கள் தேவை. தமிழீழத்தில் கடமை புரிபவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். தொடர்பு இல. 813, C/o உதயன். [4274]

யாழ். இந்து விரைவில் கனடா செல்லவிருக்கும் 29 வயது A/L சித்தியடைந்த 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு கனடாவில் உள்ள மணமகன்தேவை. தொடர்பு: இல. 350 மே/பா உதயன் யாழ்ப்பாணம். [18031]

தவறிவிட்டது

நிர்மலா செல்வரட்ணம் ஆகிய எனது அடையாள அட்டையும் [645090896X] பல்கலைக் கழக அடையாள அட்டையும் பேர்சுடன் பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் சிவன் கோவிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயதுசெய்து யாழ். பல்கலைக் கழக தாவரவியல் துறையில் ஒப்படைக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன். [18029]

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குந்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4265]

விண்ணப்பப்படிவம்

கல்லூரி ஆசிரியர்களுக்கான Incentive Allowance விண்ணப்பப் படிவம் இன்று பி. ப. 3-00 மணிமுதல் விற்பனைக்கு வரும். விலை ரூபா 2-50. அருண் அச்சகம், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமை]. [சி/0442]

பிரேமவாஹினி

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் சொற்பொழிவுகள் விற்பனையாகின்றன. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/0485]

ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிர்பபது ஏன்?

ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையை ஜனாதிபதி பிரேமதாஸா கலைத்த நடவடிக்கை தவறு. அதற்காகவே அவர் மீது அரசியல் குற்றச்சாட்டு சுமத்தும் நடவடிக்கையில் தமது கட்சியும் சேர்ந்து கொண்டிருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த எம். பியும் அதன் பொதுச் செயலாளருமான திரு. எஸ். பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதற்கிடையில்—

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகியவற்றின் தலா இரண்டு எம். பிக்களும் பிரேமாவுக்கு எதிரான பிரேரணையில் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

நவீல்ட் பாடசாலை
விடுதி வசதி

நவீல்ட் பாடசாலை விடுதி வசதிகளுடன் எதிர்வரும் 09-09-1991 தொடக்கம் இயங்க உள்ளது. மாணவர்களை 08-09-1991 இல் விடுதியில் சேர்க்குமாறு பெற்றோர் வேண்டப்படுகின்றனர். வெளிமாவட்டப் பிள்ளைகளை அவசரத்திற்குக் கூட்டிச் செல்ல அவர்களுக்கு உள்ளூர்ப் பாதுகாவலர் நியமிக்கப்பட வேண்டியது வலியுறுத்தப்படுகின்றது.

அதிபர்.

(சி/0473)

அரசாங்க எழுதுனர் சேவை
கிராம அலுவலர் சேவை

ஆகிய இரு பதவிகளுக்கும் அரச அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வயதெல்லை 18 - 40

விண்ணப்ப முடிவுத் திகதி: 30 - 09 - 1991

உரிய விண்ணப்பப் பத்திரத்தையும், விவரக்கொத்தினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

போட்டிப் பரீட்சைக்கான

பயிற்சி வகுப்புகள்

சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

ஆரம்பம்: எழுதுனர் சேவை: 08 - 09 - 91
கிராம அலுவலர் சேவை: 14 - 09 - 91

முழுக் கட்டணம்: 275/-

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET,
(O.L.R. தேவாலய மேற்குப் பக்கம்),
JAFFNA. [சி-0469]

சைவ சித்தாந்த
உயர் நிறுவன நிதி உதவிக்காக

13 - 10 - 1991 யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில்

இலங்கை வேந்தனின்

"கதகளி பரதநாட்டியம்"

புலவர் முத்து இராசரத்தினத்தின்

'இலங்கை வேந்தன்' (இசை, நடன, நாடகம்)

இராவணனாக இலங்கை வேந்தனின் தோற்றம்

சைவப் புலவர், மு. திருஞானசம்பந்தபிள்ளை, கௌரவ அதிபர்.

சித்தாந்த கலாநிதி, ச. கண்பதிப்பிள்ளை, கௌரவ அமைப்பாளர்.

(18021)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 06 - 12 - 1986

உதிர்வு: 07 - 08 - 1991

செல்வி குலமதி செல்வரத்தினம்

ஈன்றவர் நெஞ்சில் இடியது வீழ்ந்துன்
இமையது மூடியதா? உனைப்
போன்றவர் பிறந்து போலியாய் மகிழ்ந்து
போவது நீதியா? உலகில்
மாண்டவர் மீண்டும் வருவதில்லை யெனும்
மரபது மாறியதா? மகளே—
ஓர் திங்கள் ஓடி மறைந்தது நீ போய்
அவலம் தீர்ந்ததுவா? எம்
அழுகை ஓய்ந்ததுவா?
வேதனைத் தீயில் வெந்து துடிக்கும்

உன் பிரியமுள்ள
அப்பா, அம்மா, அண்ணாமார்,
தம்பிமார், உற்றார்,
உறவினர்.

திருநெல்வேலி கிழக்கு. [17991)

''பசுமையான பாச நினைவுகளுடன்''

12 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

திரு,
கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர் - வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 17 - 07 - 1913 மறைவு: 20 - 08 - 1979

அன்புள்ள அப்பா,

''ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்துமென்ன, வேரென நீயிருந்தாய் அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம். எம் கண்ணில் நீர் வடிந்தால் உன் நெஞ்சில் உதிரம் கொட்டிடுமே!

நல்லூர்க் கந்தனின் சப்பறத் திருவிழா நடைபெறும் பெருநாளாகிய இன்று உங்களுடைய பன்னிரண்டாவது ஆண்டுத் திவசம் நடைபெறுகின்றது. இன்று உங்களுடைய ஆத்மா சாந்தியடைய உளமாற இறைவனை இறைஞ்சி நிற்கும்:

உங்கள் அன்பு,
மனைவி, ஆருயிர்ச் செல்வங்கள்,
அன்பு மருமக்கள்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

110, பிறவுண் வீதி,
[சி-0465]

யாழ்/ வடமராட்சி
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

மஹோற்சவம் 1991

கொடியேற்றம் : 08-09-1991 ஞாயிற்றுக்கிழமை
தேர் : 22-09-1991 ஞாயிற்றுக்கிழமை
சமுத்திரதீர்த்தம்: 23-09-1991 திங்கட்கிழமை
கேணித்தீர்த்தம் : 24-09-1991 செவ்வாய்க்கிழமை

வாகனப் போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக உற்சவங்கள் மாலை 5-00 மணிக்கு நிறைவுபெறும்.

தர்மகர்த்தா சபை.

(18021)

யாழ். மாவட்ட மக்களுக்கு!

ஓர் அரிய சந்தர்ப்பம்!

இலங்கை அரசாங்க எழுதுனர் சேவை

யாழ். மாவட்டத்திலுள்ள 500 க்கும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

போட்டிப் பரீட்சை

விரைவில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான 2 மாத

விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 07 - 09 - 91 மு. ப. 10 மணி

பாடநெறி:

1. மொழித் தேர்ச்சி 2. பொதுஉளச் சார்பு

தகைமைகள்:

18—40 வயதிற்கிடைப்பட்ட G. C. E. O/L அல்லது N. C. G. E. பரீட்சையில் 6 பாடங்களில் கணிதம், தமிழ் உட்பட 4பாடங்களில் திறமைச்சித்தி (C) (B)

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 09 - 91

விண்ணப்பப் பாரவங்களையும், விவரத்தொட்டினையும் எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களிலும், விடுமுறை நாட்களிலும்.
★ அச்சடித்த பாடக் குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 290/- (முழுப்பயிற்சிக்கும்)

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD — JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-0440)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 25 - 07 - 1970

உதிர்வு: 16 - 09 - 1990

செல்வி பவானி சண்முகம்

(ஆசிரியை யா/கருவில் றோ. க. பாடசாலை, பழைய மாணவி: யா/இந்து மகளிர் கல்லூரி, மாணவி: யா/தொழில்நுட்பக்கல்லூரி.)

திதி: 06 - 09 - 1991

கருவறையில் வந்த சொந்தம் மறைவானதேன்?
கல்லறையில் வாழும் காலம் உருவானதேன்?
நடுவழியில் திசையிங்கே வேறானதேன்?
இடைவழியில் துவிக்கவிட்டு நீ போனதேன்?
மழலை மொழி பேச நீ மறுத்ததேனம்மா?
மலருமுந்தன் புனன்கையை மறைத்ததேனம்மா?
கலகலத்த உன் பேச்சை மறந்ததேனம்மா?
கண்ணீரைப் பிழிய விட்டு மறைந்ததேனம்மா?

உன்பிரிவால் வாடும்:

அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், அண்ணிமார், அத்தான்மார்.

'பவானி பவனம்',
வேலணை மேற்கு,
வேலணை, 8

(18020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

'பீனிக்ஸ்'ம்' புலிகளும்!

"தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நிலை சற்றுத் தளர்வடைந்துள்ளது போல் காணப்பட்டாலும் நிச்சயம் அவர்கள் அங்கு அழிந்தொழிந்து விடமாட்டார்கள். தனது சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் 'பீனிக்ஸ்' பறவையைப் போல் அவர்கள் மீண்டும் அங்கு வலிமை பெறுவார்கள்."

— இப்படி இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புவதாக சென்னையில் இருந்து வெளிவரும் 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அதாவது இந்திய மத்திய அரசோ, தமிழ் நாடு மாநில அரசோ எப்படித்தான் அழுத்தங்களைப் பிரயோகித்தாலும் விடுதலைப் புலிகளை அங்கு அழித்துவிடமுடியாது. தமிழ்நாட்டில் மீண்டும் தமது தளத்தை விரிவுபடுத்தவும், பலத்தைப் பெருக்கவும் தேவையான ஆற்றல் புலிகளிடம் இருக்கிறது என்பதையே 'இந்து' நாளிதழ் தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான இந்திய அழுத்தங்கள் வி. பி. சிங்கின் வீழ்ச்சியுடன் ஆரம்பமாகின. வி. பி. சிங்கிற்குப் பின்னர் பதவிக்கு வந்த சந்திரசேகர் மூலம் அழுத்தங்களைப் பிரயோகித்தவர் ராஜீவ் காந்திதான். இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

இந்திய அமைதி காக்கும் படையினருக்கு ஈழத்தில் ஏற்பட்ட தோல்விக்கு—அதாவது அவமானத்துக்கு விடுதலைப் புலிகளை பழிவாங்குவதும்—ஈழத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ் குழுக்களை மீண்டும் முன்னணிக்கு கொண்டுவருவதும் — ரஜீவ் காந்தியின் உள்நோக்கமாக இருந்திருக்கலாம்.

இந்த அழுத்தங்கள் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் தீவிரம் அடைந்து வருகின்றன. ராஜீவ் காந்தியின் கொலையில் தாம் சம்பந்தப்படவில்லை என்று விடுதலைப் புலிகள் திட்டவட்டமாக அறிவித்தும் கூட இந்தியா அதை நம்ப மறுக்கிறது.

அத்துடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை அதுமுடுக்கி விட்டு வருகிறது. அதாவது ஸ்ரீலங்கா பேரினவாத அரசு தமிழ் மக்களை அடக்கி இராணுவரீதியில் செல்வதை இந்தியா இராஜீய ரீதியிலும் மற்றும் வழிகளிலும் செய்ய முயற்சிக்கிறது.

தனது நோக்கங்களை பூர்த்தி செய்ய தனக்கு இசைவான அரசை ஸ்ரீலங்காவில் நிறுவுவதற்கு இந்தியா இனி முயற்சி செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்திய எதிர்ப்பாளரான ஜனாதிபதி பிரேமதாஸாவைக் கவிழ்க்க தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிக்கு இந்திய செய்தித் தொடர்பு ஸ்தாபனங்கள் பெரும் முக்கியத்துவம் அளிப்பது இந்தியாவின் போக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஆகவே ஸ்ரீலங்காவும் இந்தியாவும் இணைந்தாலும்கூட எந்தவித அழுத்தங்களும் தமிழ் மக்களின் இன விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்துவிடமாட்டா.

கடந்த 15 வருடகால விடுதலைப் போராட்ட வரலாறு இதற்குச் சான்று. விடுதலைப் போராட்டம் முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படவே இந்த அழுத்தங்கள் பல வழிகளிலும் கடந்தகாலங்களில் உதவி வந்தன. தற்போது உதவி வருகின்றன. இதனை ஸ்ரீலங்கா அரசும் இந்திய அரசும் தெரிந்தும் தெரியாததுபோல் நடிப்பதுதான் வேடிக்கையானது.

சபாநாயகர் நடவடிக்கை; ஐ.தே.க. அதிர்ச்சி! ஏமாற்றம்!!

நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, செப். 6

''மக்களின் சுயாதிபத்தியத்தைப் பாதிக்கின்ற தன்மை கொண்டதும்- தேவையான எண்ணிக்கை உடையஎம்.பிக்களின் கையெழுத்துக்களைக் கொண்டிராததுமான பிரேரணை ஒன்று தொடர்பாக சபாநாயகர் காட்டிய அவசரம் குறித்து ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைகிறது''

ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா, ஜி.எம்.பிரேமச்சந்திர, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான லக்ஷ்மன்செனிவிரத்னா, சந்திரா கங்கந்த எம்.பிக்களான வின்சென்ட் பெரேரா, சமரவீர வீரவன்னி, பிரேமரத்தின குணசேகர ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

ஜனாதிபதி மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே.

இத்தீர்மானம் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்மொழியப்பட்டு அமைச்சர் விஜயபாலமெண்டிஸால் வழிமொழியப்பட்டது. (இ-3)

நாடாளுமன்றத்தைக் கூட்ட சுதந்திரக் கட்சி கோரிக்கை

கொழும்பு, செப் 6

நாடாளுமன்றத்தைஉடனே கூட்டி ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை பரிசீலனைக்கு எடுக்கப்படவேண்டும்.

இப்படியான தீர்மானம் ஒன்றைச் சுதந்திரக்கட்சி நாடாளுமன்றக்குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை அரசாங்க பிரசாரத்துக்கு மட்டும் பயன்படுத்தப்படுவதைக் கண்டிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. (இ-3)

கருத்துவேறுபாடுகளை நீக்க கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு, செப். 6

'வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உங்களுக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகளுக்கு விரைவில் ஒரு முடிவு காணுங்கள்'.

தமிழ் மற்றும் முஸ்லிம் அமைப்புகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

சர்வகட்சி மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்தார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று (வெள்ளி) மீண்டும் கூடும் சர்வகட்சி மாநாடு, இம்மாதம் 17, 19, 20, 26, 27 ஆம் திகதிகளிலும் நடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

சிமெந்து ஊழியர் சம்பளம்: வழங்க முடியுமென நம்பிக்கை

கொழும்பு, செப். 6

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்க முடியும் என்று கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு அத்தியாவசிய சேவைகள் குறித்து கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சில் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காங்கேசன் ஆலை மூடப்பட்டிருந்தாலும், கூட்டுத்தாபனத்தின் ஏனைய கிளைகளில் இருந்து கிடைக்கும் இலாபத்தில் காங்கேசன் ஆலையின் நஷ்டத்தை ஈடுசெய்யமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை— இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட லங்கா சிமெந்து நிறுவனத் தலைவர் பேசுகையில் காங்கேசன்துறையில் மட்டும் தமது நிறுவனத்தின் ஆலை இருப்பதால், நஷ்டத்தை ஈடுசெய்யமுடியாதுள்ளது என்றார். ஊழியர்கள் எவரும் வேலையில் இருந்து நீக்கப்படவில்லை என்று தெரிவித்த அவர், மாற்று வியாபார முயற்சி பற்றி சிந்திப்பதாகவும் தெரிவித்தார். (இ-3)

கருணாநிதியின் மௌனம் 15 ஆம் திகதி கலையும்!

சென்னைக் கூட்டத்தில் பேசுவார்

சென்னை, செப். 6

கடந்த ஜூன் மாதம் சட்டசபைத் தேர்தலில் தி. மு. க. படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்த மௌனத்தை முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கைவிடுவார் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரியார், அண்ணா ஆகியோரின் பிறந்த தின விழாக்களும், தி. மு. க. ஆண்டு நிறைவு விழாவும் செப்டம்பர் 15 ஆம் திகதி சென்னையில் தி. மு. க வினரால் கொண்டாடப்படவுள்ளன. அவ்விழாக்களில் கலந்துகொண்டு திரு. கருணாநிதி பேசுவார்.

அதனைத் தொடர்ந்து பொதுவைபவங்களில் திரு. கருணாநிதி கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ் விழாவில் அண்ணா, பெரியார் மற்றும் கருணாநிதி ஆகியோரின் பெயர்களில் விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (உ-எ)

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

எழிலார் நல்லைக் கந்தா!

புள்ளி மயிலோனே வள்ளி நாயகா
துள்ளி வந்திடும் வரதா
நல்லைப் பதியிலே பள்ளி கொண்டிடும்
ஞானப்பழமும் நீயே முருகா
வல்லத் தமிழர் எம் வேள்வி சிறப்புற
அள்ளி அருள் தராய் அழகா
எல்லையில்லா எம் அல்லல் போக்குவாய்
எழிலார் நல்லைக் க[illegible]

[illegible]

உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 6

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தையொட்டி ஆலயச் சூழலில் இடம்பெற்று வரும் இசை மற்றும் சமய அரங்குகளில் சப்பறத் திருவிழா தினமான இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டபத்தில் — சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கத்தின் இசைக் கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில் — திரு. பொன். சுந்தரலிங்கத்தின் பாட்டு.

★ ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் — திரு. ந. சிவசண்முகமூர்த்தியின் ''கந்தரனுபூதி'' கதாப்பிரசங்கம்.

★ மேற்கு வீதி பிள்ளையார் கோவிலில் — கானகதாவாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கம்பராமாயணத் தொடர் விரிவுரையில் ''கும்பகர்ணன்''.

(ஒ-5-30-126)

யாழ். இந்து மாவீரர் தகவல் சேகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை வீரமரணமடைந்த மாவீரர்களில், யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ். இந்துக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

இன்று

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். மாவட்ட பல. நோ. கூ. சங்க பொது முகாமையாளர்கள் அல்லது வர்த்தக முகாமையாளர்களுக்கான கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ் பல. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் உலர் உணவு விநியோகத் திட்டம் சம்பந்தமான இறுதி முடிவுகள் எடுக்கவிருப்பதால் தவறாது சமுகம் தருமாறு கூட்டு[illegible]யினர் கேட்டுள்ளனர். (ஒ)

வவுனியா - முல்லைத்தீவு

எல்லைப் பாதுகாப்புக்கு 250 பேர் கொண்ட படை!

வவுனியா, செப். 6

வவுனியா, முல்லைத்தீவு எல்லைகளில் கிராம பாதுகாப்பில் ஈடுபட 250 பேர் கொண்ட புதிய காவல் படை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் நான்காவது காவல்படைப் பிரிவின் 10ஆவது ஆட் சேர்ப்பில் இவர்கள் அடங்குவர்.

இந்தப் படைப் பிரிவில் 25 பெண்களும் அடங்குகின்றனர்.

ஈரற்பெரியகுளம் இராணுவ முகாமில் ஒருமாதப் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ள இவர்கள் முல்லை-வவுனியா மாவட்ட எல்லைக் கிராமப்பாதுகாப்பிலும், வீதித்தடைச் சோதனைகளிலும் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

பிரிந்து சென்ற போல்டிக் நாடுகள்

ஐ.நாவில் அங்கத்துவம்பெற சோவியத் யூனியன் ஆதரவு

வாஷிங்டன், செப். 6

தனி நாடாகப் பிரிந்து சென்ற லத்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா ஆகிய நாடுகள் ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெறுவதை சோவியத் யூனியன் ஆதரிக்க முன்வந்துள்ளது.

இம் மூன்று போல்டிக் குடியரசுகளும் ஐ. நாவில் அங்கத்துவம் கோரி விண்ணப்பித்துள்ளன.

இவ் விண்ணப்பங்களை ஆதரிப்பது என்று சோவியத் யூனியன் தீர்மானித்துள்ளதாக அந்த நாட்டின் ஐ. நா. தூதர், தெரிவித்திருக்கிறார்.

இம் மூன்று குடியரசுகளும் முன்னர் சோவியத் யூனியனின் மாநிலங்களாக இருந்து வந்தன. [இ-எ]

கட்டணத்தை செலுத்தலாம்

யாழ்ப்பாணம், செப். 6

கிராம சேவையாளர் மற்றும் எழுதுவினைஞர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பங்களுக்குரிய கட்டணத்தை[100ரூபா] யாழ். செயலகத்தில், எதிர்வரும் திங்கள் முதல் செலுத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் செயலக சிறாப்பரிடம் பணத்தைச் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மேலதிக அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் தெரிவித்தார். (ஒ-3)

ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், செப். 6

வலிகாமத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களையும் கொத்தணி மற்றும் கிராமியத் தொடர்பாளர்களையும் இன்று மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. [ஒ]

மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இறுதி நாளன்று வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவார். [ஒ]

சர்வசன..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாஸா அண்மையில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

அதுபற்றி திரு. ரணில் விக்கிரமசிங்கவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது—

''ஜனாதிபதி ஆட்சிமுறையிலும், ஜனாதிபதி மீதும் நம்பிக்கை வைத்து பெரும்பான்மை எம். பிக்கள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே, ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்து முடிவு செய்ய சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டுமா என்ற கேள்வியே இப்போது எழவில்லை''— என்று பதிலளித்தார். (உ-5)

பவள விழா

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய பவள விழா நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

காலை 8 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் இருந்து கல்லூரிவரையிலான நாவலர் பவனியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். (த)

புதூரில் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, செப். 6

மட்டக்களப்பு புதூரில் கடந்த ஞாயிறன்று ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் பொதுமக்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹெரோயின் கடத்திய பெண் கைதானார்

கொழும்பு, செப். 6

4 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்துடன் சென்னையில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய ஒரு பெண்ணையும் ஓர் இளைஞரையும் போதைவஸ்துத் தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர். [ஒ-எ]

பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவங்கள்

யாழ்ப்பாணம், செப். 6

பாஸ்போர்ட் விண்ணப்பப் படிவங்கள் கடந்த 3ஆம் திகதியுடன் யாழ். செயலகத்தில் முடிந்துவிட்டன.

கடந்த மாதம் 4ஆம் திகதி கொழும்பிலிருந்து இரண்டாயிரம் படிவங்கள் இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-100)

செய்தியாளர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

''கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டபோது லலித் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை.

''ஆனால் அவர் திடீரென இப்போது வேறுவிதமாக பேசத் தொடங்கியுள்ளார்'' என்று திரு. ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாட்டில் விவரித்தார். [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிசேரா இயக்கத்தில் மொங்கோலியா

அணிசேரா இயக்கத்தின் 103 ஆவது உறுப்பு நாடாக மொங்கோலியா சேர்த்துக் கொளளப்பட்டுள்ளது.

தற்போது கானா தலைநகர் அக்ராவில் நடைபெறும் அணிசேரா இயக்க வெளி யுறவு அமைச்சர் மாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டது. (ஒ-எ)

சூறையாடிய பின் வீடுகளை படையினர் எரித்து நாசம்!

வெற்றிலைக்கேணியிலிருந்து தப்பிய மூதாட்டி தகவல்

தாளையடி, செப். 6

வெற்றிலைக்கேணிப் பகுதி யில் படையினரால் பல வீடு கள் சூறையாடப்பட்டு எரிக் கப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணிப் பகுதி யில் 47 நாட்கள் ஸ்ரீலங்காப் படையினரின் பிடியில் சிக்கி யிருந்துவிட்டு தற்போது செம் பியன்பற்று தேவாலயத்தி லுள்ள அகதிள் முகாமுக்கு வந்து உறவினருடன் சேர்ந் துள்ள முதாட்டியான திருமதி மரியாம்பிள்ளை அந்தோனி யாள் (வயது 86) இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறிய தாவது:

படையினர் வெற்றிலைக் கேணியில் தரையிறங்கிய தினத்தன்று கடலில் இருந்தும், ஆகாயத்திலிருந்தும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதனால் நானும், மா. சூசைப்பிள்ளை என்ற வயோதிபரும், அவரது மனைவியான மரியப்பிள்ளை என்பவரும் வெற்றிலைக் கேணியிலுள்ள மாதா கோயி லில் தஞ்சமடைந்தோம்.

என்னுடன் இருந்தவர் களில் ஒருவர் கண் தெரியாத வராகவும், நடக்கமுடியாத வராகவும் இருந்தமை யால் அக் கோயிலுக்குள் ளேயே தொடர்ந்து இருக்க வேண்டியிருந்தது.

வெற்றிலைக்கேணியில் படை யினர் தரையிறங்கிய தினத் தில் இருந்து மூன்றாவது நாளே நாங்கள் இருந்த கோயில் பகுதிக்குப் படை யினர் வந்தார்கள்.

அவர்களை நாங்கள் கண்ட வுடன் அவ்விடத்தில் இருந்து வெளியேற முயன்றோம். படையினர் எங்களை வெளி யேற விடாது கோயிலுக்குள் ளேயே இருக்கும்படி கூறி னார்கள். தான் நான்கு நட வடிகள் ஆயிவளைப் பக்க மாக வெளியேற முயன்ற போது போகமுடியாது எனக்கூறி என்னைப் படை யினர் திருப்பிவிட்டார்கள்.

வெற்றிலைக்கேணிப் பகுதி யில் தென்னை மரங்கள் பனை மரங்கள் ஆகியவற்றை தற்போது காணமுடியாது. அந்தோனியார் கோயிலுக் கும் வியாகுலமாதா கோயி லுக்குமிடையே முட்கம்பி வேலிகளைப் படையினர் அமைத்து உள்ளார்கள்.

அங்கு நின்ற படையினரில் அநேகர் தமிழில் சரளமா கப் பேசினார்கள். "புலிகள் எல்லோரையும் கொன்றுவிட் டோம்" என அவர்கள் எம் மிடம் வந்து கூறுவார்கள்.

நான் படையினருக்குத் தெரியாமலே காட்டுப்பக்க மாக வெளியேறி ஆயிவளவ ளுடாக வத்திராயனை அடைந்து அங்கு ஒருநாள் இர வைக் கழித்துவிட்டு இங்கு வந்து சேர்ந்தேன்.

என்னுடன் இருந்த மற்ற இரு வயோதிபர்களும் நடக்க முடியாத நிலையில் கோயி லுக்குள்ளேயே தங்கி உள் ளார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-144)

ஆள் கடத்தல்

கொழும்பு, செப். 6

வவுனியாவில் ராஜாதனி காசலம் என்பவர் ஐந்து பேர் கொண்ட ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டாராம்.

கடந்த 30 ஆம் திகதி அக் கடத்தல் இடம் பெற்றதாக படையினர் தெரிவித்தனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது (இ - எ)

மணலாறில் 24 மணி நேரமும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்துவதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

"அவ்ரோ" விமானங்கள் வீசும் எரிகுண்டுகளினால் ஆங்காங்கே காடுகள் தீப்பற்றி எரிவதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விமானக் குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் கிடைக்காத போதிலும்— இதனால் பெரும் அழிவு ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்பட்டது. [உ-எ-15]

இரகசிய வாக்கெடுப்புக்கு சட்டத்தில் இடமில்லை!

அரச தரப்பில் கருத்து

ஜனாதிபதி மீதான அரசி யல் குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத் திற்கு எடுத்துக் கொள்ளப் படின், அதன் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற எதிர்க்கட்சி களின் கோரிக்கையை அர சாங்கம் நிராகரித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாள ரான திரு. ரணில் விக்கிரம சிங்க நேற்று செய்தியாளர் மாநாட்டில் இத்தத் தகவலை வெளியிட்டார்.

"நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பிரேரணை கள் மீது இரகசிய வாக் கெடுப்பு நடத்த சட்ட விதி கள் இடமளிக்கவில்லை. குரல் வாக்கெடுப்பின் மூலமே விடயங்கள் தீர் மானிக்கப்படுகின்றன. நாடாளுமன்ற சட்ட விதி களுக்கு (Standing order) மூர ணாக சபாநாயகர் செயற் படமுடியாது." — என்றும் அவர் சொன்னார். (உ-எ)

தந்திரிமலை முகாம் மீது புலிகள் கடும் தாக்குதல்

கொழும்பு, செப். 6

மதவாச்சிப் பகுதி தந்திரி மலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிறன்று சுமார் 4 மணி நேரம் கடும் தாக்குதல் நடத் தினர் என்று கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரி வித்தனர்.

இந்தத் தாக்குதலின் போது படுகாயமடைந்த சிப்பாய்கள் பலர் அனுராதபுரம் ஆஸ்பத் திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மடு பக்கமிருந்து அடர்ந்த காட்டுப் பகுதியூடாக வந்த விடுதலைப் புலிகள் இராணுவ முகாமுக்கு சுமார் இருநூறு யார் தூரத்திலிருந்து தாக்கு தல் நடத்தினர் என்றும்— ஏற்கனவே பல தடவைகள் இம் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தகவல் தெரிவித்தன. [ஒ-த]

மரண அறிவித்தல்

பிள்ளையார் நல்லதம்பி

வேலணை மெற்கைச் சேர்ந்த பிள்ளையார் நல்ல தம்பி அவர்கள் நேற்று [5 - 9 - 91] காலமானார். அன்னார் காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்லம்மா, அருளம்மா ஆகியோரின் அன் புத் தந்தையும், பரம்சோதி, சபாரத்தினம் [காந்தி] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற முத்து தம்பி, காலஞ்சென்ற செல்லையா கதிரவேலு, காலஞ் சென்ற அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [6 - 9 - 91] பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சட்டி இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:

வேலணை 4 க.பரம்சோதி [மருமகன்]

[17697]

80 ஆவது ஆண்டு பூர்த்தி வைபவம்

[சதாபிஷேகம்]

மாவை. ஐ. வைத்தியநாதக் குருக்கள்

மாவை. ஐ. வைத்தியநாதக் குருக்கள் [இராசாக் குருக்கள்] அவர்களின் 80 ஆவது ஆண்டு பூர்த்தி வைப வம் [சதாபிஷேகம்] நிகிழ் 10-9-91; செல்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் நெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது.

ஆகவே அன்பர்கள் இதனை அழைப்பிதழாகக் கொண்டு சமூகம் தந்து வைபவத்தைச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வண்ணம்:

அன்புள்ள மக்கள், மருமக்கள்.

ஐ. வை. சுப்பிரமணிய சர்மா

ஐ. வை. ஐயாச்சாமி சர்மா

(4281)

கவின் கலைகள் பயிலகம்
SCHOOL OF FINE ARTS

பயிலக வகுப்புகள் யாவும் மீண்டும் ஆரம்பமாகி விட்டன.

★ புல்லாங்குழல் ★

பயில விரும்புவோர் 10 - 09 - 1991 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

★ நடனம் ★ வாய்ப்பாட்டு ★ மிருதங்கம்
★ வீணை ★ வயலின் ★ ஓர்கன்
★ இதரர் பரடங்களுக்கான புதிய வகுப்புகளில் சேர விரும்புவோர்

30 - 09 - 1991 க்கு முன் விண்ணப்பிக்கவும்

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி, யாழ்.

V.J. கொன்ஸ்ரன்ரைன்,
பொதுச் செயலாளர்

(பி-0467)

இன்றைய சேமிப்பு—நாளைய சந்ததியின் பாதுகாப்பு

இன்றே

ஷ்றாவுடன்

இணைந்து சேமியுங்கள்!

நிதித்துறையில் உங்கள் நண்பன்

ஷ்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

2, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை,
கொழும்பு - 4
தொலைபேசி: 508087-90

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org